(c) A sum of (Rs. 10,000) rupees ten thousand only has been invested by the Government of Madras in 10 'C' Class shares of Rs. 1,000 each, of the society.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த சொஸைடி மூலம் நமது மாகாணத்திலுள்ள கைத்தறித் துணிகள் விநியோகிக்கப் படுகிறதா ? அப்படியானால் எந்த அளவு இந்த சொஸைடி நமது மாகாணத்திலுள்ள கைத்தறித் துணிகளை ஊக்குவிப்பதற்கு முயற்சி எடுக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : அகில இந்தியாவிலும் இருக்கக்கூடிய கைத்தறித் துணிகளை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விற்பனை செய்வதற்காக இந்த "பப்ளிக் சொஸைடி" ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தத் துறையிலே நமது ராஜ்யத்திலுள்ள துணிகளும் வாங்கி விற்பனை செய்யப்படுகிறது.

Musalveli Irrigation

*19 Q.— SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா.—

தஞ்சை ஜில்லா, திருத்துறைப்பூண்டி தாலுகா, தில்லை விளாகம் முதல் வெளி நிலங்கள் சம்மந்தமான நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் இந்த வருஷம் எத்தனை ஏக்கர்களுக்கு பாசனவசதி அளிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Nil. (The plans and estimates for the scheme are now being prepared by the Public Works Department.)

SRI A. VEDARATHNAM : இந்தத் திட்டம் எப்பொழுது முடிவுக்கு வரும் ? அடுத்த ஆண்டிலாவது பசுலி வருவதற்குள் இந்தப் பாசன வசதி செய்து கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM. : அதிகப்படியான பாசனவசதிக்கு 6 க்யூசெக்ஸ் தேவைப்படுகிறது. அதற்கு ஒரு "ஸப்லிமெண்டரி ஸ்லூயிஸ்" போட்டுவிட்டால் போதும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி இப்பொழுது 'பிளான்ஸ் அன்ட் எஸ்டிமேட்ஸ்' தயார் செய்யப்படுகிறது. ஆகையினால் தாமதம் இருக்காது.

Family Planning

* 20 Q.—SRI A. VEDARATHNAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–59-ல் குடும்பக் கட்டுபாடு திட்டத்திற்கு அரசாங்கம் எவ்வளவு ரூபாய் செலவிட திட்டமிட்டிருக்கிறது ?

(ஆ) அத்திட்டத்தின் விபரமென்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Approximately Rs. 2,14,229 by this Government.

(b) A statement [a] is placed on the table of the House.

[a] Printed as Appendix VII on page 51 infra.

20th April 1959]

SRI K. VINAYAKAM : Sir are the Government aware that this Family Planning Scheme has not yielded proper results, commensurate with the amount spent on the scheme?

THE HON. SRI M. A. MANICKAVELU : We cannot evaluate the results so soon. Certain schemes or certain projects takes time to give results. They must gain momentum. It takes *time* to gain momentum. In the beginning itself it cannot yield results. Even a car takes time to pick up speed. (Laughter).

SRI S. LAZAR : Sir, in view of the considered opinion of the experts that economic development will result by Family Planning and in view of the practical experience that we have had in other countries, will Government adopt a go-slow policy in regard to steps to be taken under items (2) and (3) mentioned in the statement?

THE HON. SRI M. A. MANICKAVELU : In the very nature of things, the process is slow. No further steps are considered necessary.

SRI M. K. SOMASUNDARAM : பெண்கள் ஆபரேஷன் செய்து கொண்டால் வெற்றிகரமாக இருக்கிறது, ஆண்கள் ஆபரேஷன் செய்து கொண்டால் வெற்றிகரமாக இல்லை என்று முன்பு சொல்லப்பட்டதே ? இப்பொழுது ஆண்கள் ஆபரேஷன் செய்து கொண்டாலும் வெற்றிகரமாக இருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இருசாராரும் ஆபரேஷன் செய்து கொண்டால் வெற்றிகரமாக இருக்கும். ஆனால் பெண்கள் ஆபரேஷன் செய்து கொள்வது சுலபமாக இருக்கிறது. ஏனென்றால் அது அவர்களுடைய பிரசவ காலத்தில் சுலபமாக செய்யப்படுகிறது. அவர்கள் பிரசவ காலத்தில் தொந்தரவுபடுவதால் ஆபரேஷன் செய்து பார்க்கலாம் என்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படுகிறது.

SRI C. R. RAMASWAMI : Sir, Government are spending the largest sums of money, Rs. 1,80,000 odd. Are they watching the number of births, and has there been only reduction in the number of births as a result of the Family Planning Scheme which has been in force in the city for the last year or more.

THE HON. SRI M. A. MANICKAVELU : I think I said sometime ago that there was a small reduction of half a per cent or so. More than 2,000 sterilizations have taken place and we have to wait to see the results. We cannot predict anything about the results.

SRI P. S. CHINNADURAI : ஆபரேஷன் செய்துகொள்வதன் மூலம் ஆரோக்கியம் கெடுகிறது என்று சொல்லப்படுவது உண்மையா ? அப்படியானால், ஆபரேஷன் செய்துகொள்வதற்கு ஆக்கம் கொடுப்பதை அரசாங்கம் நிறுத்திக்கொள்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆபரேஷன் செய்துகொள்வதில் ஆரோக்கியம் அதிகப்படுகிறது என்றுகூட தகவல் இருக்கிறது. (சிரிப்பு).

Basic Schools

*21 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதியமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) ஆதாரப் பள்ளிகளில் நாள் ஒன்றுக்கு எத்தனை பீரியட் வகுப்பு நடத்தப்படுகிறது?

(ஆ) அதில் எத்தனை பீரியட் நூல் நூற்பு வகுப்பு நடத்தப்படுகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Seven periods lasting for a total duration of five hours.

(*b*) Two hours are allotted for craft work in a day. Out of this, one hour is spent on spinning.

SRI V. K. KOTHANDARAMAN: இந்த நூல் நூற்பதற்குமட்டும் இந்த அளவுக்கு 'பீரியட்' ஒதுக்கப்படுவதால் மாணவர்களுடைய கல்வித் தரம் சிறிய வயதிலே குறைந்துவிடுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ஆதாரக் கல்வியினுடைய அடிப்படை தெரியாமல் பேசுவது என்று எண்ணப்படுகிறது ஏனென்றால், நூல் நூற்பது என்றால் வெறும் நூல் நூற்பது மட்டுமல்ல, அதன் மூலம் கல்வி பயிலவேண்டுமென்பதுதான் நோக்கம். இம்மாதிரி தொழில் மூலம் கல்வி கற்றால், அனுபவமும் அறிவும் வளருகிறது என்று இப்பொழுது எல்லா குழந்தை உள்ளத் தத்துவ ஞானிகளும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், இதனால் அறிவோ, படிப்போ குறைந்துவிடுகிறது என்று கருதுவது தப்பான கருத்து.

Anandam Soap Factory, Gudiyatham

* 22 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் உதவிபெற்று, வடாற்காடு ஜில்லா, குடியாத்தத்தில் நடத்தப்படும் ஆனந்தம் சோப் பாக்டரி இப்போது நடைபெறுகிறதா ?

(ஆ) அது எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) எப்போது மூடப்பட்டது ?

(ஈ) அதற்கு எவ்வளவு பணம் கடனாக கொடுக்கப்பட்டது ?

(உ) அதைத் திருப்பி வசூல் செய்ய அரசாங்கத்தார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No Soap Factory at Gudiyatham by name Anandam Soap Factory has been given any assistance from Government. Only at Ranipet, there is an Industrial Co-operative Society by name Anandam Harijan Soap